[24th December 1956

THE HON. SRI C. SUBRAMANIAM : That will be a matter between the management and the teacher concerned. But, in view of the suggestion made by the hon. Member, I shall have the whole thing examined.

SRI G. KRISHNAMOORTHI : Did the Government reopen the correspondence with the Postmaster-General in the matter of opening voluminous pass-books of 60 pages of six lines on each page in the case of teachers to cover their 30 years' service so that there may not be the need for continuation pass-books? On a suggestion made by me, this proposal was taken up by the Government with the Postmaster-General.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to have notice.

Industrial Housing and the Pallikkarani Swamp Reclamation Schemes

* 126 *Q.*—SRI T. PURUSHOTHAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware that an American Expert was deputed by the United Nations at the instance of the Amalgamations Limited, Madras, to submit a report on the Industrial Housing and the Pallikkarani Swamp Reclamation Schemes (Chingleput district);

(*b*) if so, whether the Government have perused the report of the said Expert; and

(*c*) whether the Government have any proposal for the improvement of the area in the light of the recommendations of the said Expert?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) No.

SRI T. PURUSHOTHAM : Will the Hon. Minister give us the details of the report of the expert and state why no action has been taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : The experts were invited at the instance of the Amalgamations Limited and the good offices of the Government of India were utilized for getting the experts. The experts after examination, have submitted a scheme by means of which the salt water could be prevented from inundating the cultivable land. As regards industrial development, it is reported that a " rural city " could be established there. The estimated cost of the scheme was Rs. 7 crores. So, everybody was frightened at the figure and there it is. Meanwhile, the Government have not been keeping quiet. They have a less costly scheme. They have now ordered that the salt water be prevented to a certain extent by means of a scheme costing Rs. 15,000 by putting up a dyke.

24th December 1956]

SRI T. PURUSHOTHAM : Will the Government institute a Town Planning Scheme for the area as a model scheme and take up the matter with the district board so that they can work out a Town Planning Scheme over a number of years part by part because of the extravagant cost reported by the Hon. Minister?

THE HON. SRI M. A. MANICKAVELU : Does the hon. Member refer to the Town Planning Scheme for the area in question? Anyway, the swamp business should be tackled first. Then only any Town Planning Scheme can be thought of.

SRI V. V. RAMASWAMI : இந்த நிபுணர்கள் சொல்லியுள்ள யோசனைப் படி இந்தத் திட்டத்திற்கு ரூ. 7 கோடி செலவாகும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செங்கற்பட்டு ஜில்லாவிற்கு மாத்திரம் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா, அல்லது மற்ற இடங்களுக்கும் சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : செங்கற்பட்டு ஜில்லாவிற்குக் கூட இல்லை. செங்கற்பட்டு ஜில்லாவிலே, ஒரு தாலுகாவிலே ஒரு குறிப்பிட்ட இடத்திலே 'ரூரல் சிடி' ஒன்று நிர்மாணிப்பதற்கு இந்தத் திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறினால் ரொம்ப நன்றாக இருக்கும். ஆனால் ரூ. 7 கோடிக்கு எங்கே போவது என்பது தான் இப்போது பிரச்னையாக இருக்கிறது.

SRI T. PURUSHOTHAM : சென்னை நகரத்தில் இருக்கும் அதிக ஜனத்தொகையை சமாளிப்பதற்காக இந்த மாதிரி ஒரு திட்டத்தை நிறைவேற்றி அங்கே ஜனங்கள் குடியிருக்க வசதி செய்யலாம் அல்லவா? மேலும், இம்மாதிரித் திட்டத்தை ஒரு ஜில்லாவிற்கு என்று வகுக்காமல் ராஜ்யம் பூராவிற்கும் வகுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளலாமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜனத்தொகை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு இப்போது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்று இருக்கிறது. அதைத் தவிர இந்தத் திட்டத்தையும் அமுலுக்குக்கொண்டுவந்தால் நல்லதுதான். ஆனால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் பணம் ரொம்பச் செலவாகும். அதுதான் இப்போது பிரச்னையாக இருக்கிறது.

SRI N. ANNAMALAI PILLAI : இந்த ரூ. 7 கோடியை எல்லா ஜில்லாக்களுக்கும் பிரித்து, ஒரு கிராமத்திற்கு 10 வீடுகள் அல்லது 15 வீடுகள் என்று சர்க்கார் ஏதாவதொரு அளவு வைத்துக்கொண்டு அவைகளை ஒரு புதிய கிராமமாக நிர்மாணித்தால், அதைப் பார்த்துவிட்டு, கிராமங்களிலுள்ள பணக்காரர்கள் தாங்களாகவே முன்வந்து கிராமங்களை அபிவிருத்தி செய்யக்கூடும். ஒரே ஜில்லாவில் ஒரு தாலுகாவில் ஒரே ஒரு பட்டிணத்தை சிருஷ்டி பண்ணிவிட்டால் இந்த ராஜ்யம் பூராவிலும் உள்ள கிராமங்கள் எல்லாம் பட்டிணங்கள் ஆகிவிடாது. ஆகையால் எல்லா ஜில்லாக்களுக்கும் அந்தத் தொகையைப் பிரித்துக் கொடுத்து பல இடங்களில் வீடு கட்டுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படிப் பிரித்துக் கொடுத்தால் ஒன்றும் பிரயோஜனம் இல்லாமலே போய்விடும். சில பையன்கள் காகிதங்களைப் பிய்த்துப் பிய்த்துப் போடுவார்கள், அவைகளெல்லாம் காற்றிலே பறந்து போகும். அந்த மாதிரி ஆகிவிடும்.